# உரிமைக்குக் குரல் எழுப்பும் பெருமைக்குரிய முதல்வர்!

## சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னின்று நடத்திய

## கழகத் தலைவர் பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டத்தில் – ‘தினமணி’ ஆசிரியர் வைத்தியநாதன் புகழாரம்!

**சென்னை, மார்ச் 3-**

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திரு.வி.க. நகர் தொகுதியில் முன்னின்று நடத்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் ‘தினமணி’ ஆசிரியர் வைத்திய நாதன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், “உரிமைக்குக் குரல் எழுப்பும் பெருமைக்குரிய முதல்வர், நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!” என்று புகழாரம் சூட்டினார்.**

விழாவில் தினமணி ஆசிரியர் வைத்தியநாதன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

எனக்கும், பிறந்தநாள் காணும் முதல்வருக்கும் வரலாற்றுத் தொடர்பு உண்டு. அவரது வரலாற்றில் நான் இடம்பெறாவிட்டாலும், எனது வரலாற்றில் அவர் நிச்சயமாக இடம் பெறுவார். ஏனென்றால், அவருடைய முதலாவது அரசியல் பேட்டியை எடுத்தவன் என்ற பெருமையும், பெருமிதமும் எனக்கு உண்டு.

அவர் இளைஞரணித் தலைவரான போது, அவரை நான் பேட்டி எடுத்ததும், “அதை நீங்கள் ஒருமுறை பார்க்கிறீர்களா?’ என்று நான் கேட்டபோது, அவரது தந்தையார், “நான் படித்துப் பார்க்க வேண்டாம்’ என்று சொன்னதும், இப்போதும் என் நினைவில் நிழலாடுகின்றன. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

### அசைக்க முடியாத நம்பிக்கை!

ஒன்று, எனக்கு தரப்பட்ட பாராட்டு! “பேட்டி எடுத்தவர் நீங்கள். அது எப்படி வந்திருக்கிறது என்று நான் பார்க்க வேண்டியதில்லை. நீங்கள் நன்றாக எடுத்திருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்’ என்று கலைஞர் அவர்கள் என்மீது வைத்திருந்த நம்பிக்கையின் வெளிப்பாடு.

அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. “பேட்டி தந்திருப்பது எனது மகன். எனக்குப் பிறகு இந்தக் கட்சியையும், அந்தக் கட்சி நடத்தும் ஆட்சியையும் தலைமை தாங்கி வழிநடத்த இருப்பவர். அவர் என்ன சொல்லி இருப்பார், எப்படி உங்களது பேட்டியில் கேள்விகளை எதிர்கொண்டிருப்பார் என்று எனக்குத் தெரியும். அதை நான் படித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அச்சில் பார்த்துக் கொள்கிறேன்’ என்கிற தனது மகனும் அரசியல் வாரிசுமான மு.க. ஸ்டாலின் மீது அவர் வைத்திருந்த அசைக்கமுடியாத நம்பிக்கை.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் அவருடனான தொடர்பும்; அவர் மீது நான் வைத்திருக்கும் அளப்பரிய மரியாதையும், அன்பும்; அவர் என் மீது காட்டுகின்ற பரிவும், நெருக்கமும் அதற்காகத்தான் இந்த விழாவிற்கு நான் வந்திருக்கிறேன். முதல்வரின் பிறந்தநாளில் அவரை வாழ்த்திப் பேச விழைந்திருக்கிறேன்.

என்னை அழைத்திருப்பது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு பி.கே.சேகர்பாபு அவர்கள். அவர் அமைச்சர் என்கின்ற முறையில் என்னை அழைக்கவில்லை. நான் “தினமணி’ ஆசிரியர் என்பதற்காகவும் என்னை அவர் அழைக்கவில்லை. அவர் அமைச்சராக இல்லாவிட்டாலும் நான் தினமணி ஆசிரியராக இல்லாவிட்டாலும் நான் அழைத்தால் அவர் வருவார்; அவர் அழைத்தால் நான் வருவேன். எனக்கும் அவருக்குமான தொடர்பும், நட்பும் அத்தகையது.

இன்னொன்றையும் நான் இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். ஒரு கட்சியிலிருந்து அவர் அவமானப்படுத்தப்பட்டு வெளியேறியபோது, “அடடா, இப்படி வெளியேற்றுகிறார்களே... அவமானப்படுத்தப்பட்டு அனுப்புகிறார்களே... இவர் என்ன செய்யப் போகிறார்?” என்று ஒரு நிமிடம் நான் திடுக்கிட்டேன்.



அப்போது நான் நினைத்துக் கொண்டேன். “எந்த ஒரு காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்கும்’ என்று. இப்போது எனக்குத் தெரிகிறது, இவர் சேர வேண்டிய இடத்திற்கு இவரைக் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்பதற்காகக் காலம் அவரை திசை திருப்பிவிட்டது என்று.

தனது பேச்சிலும் மூச்சிலும் அனுமன் ராமனை நினைப்பது போல, தனது தலைவனை இணைத்துக்கொண்ட தொண்டனைப் பாராட்டுவதா இல்லை, தொண்டைப் பாராட்டுவதா? இல்லை, “இவரிடம் இத்தனை திறமைகள் இருக்கின்றன. இவர் என்னுடன் நிழலாகத் தொடரும் தகுதி படைத்தவர்’ என்று இணைத்துக்கொண்ட தலைவரைப் பாராட்டுவதா? அவை இரண்டுமே தான்.

### பம்பரமாகச் சுழன்று செயல்படுகிறார்கள்!

விமான நிலையத்திலிருந்து வரும் போது சுவரொட்டி ஒன்று பார்த்தேன். அந்த சுவரொட்டியில் “ஏ.எம்., பி.எம். என்று பாராமல் ஒவ்வொரு நொடியும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சி.எம்.’ என்று முதல்வர் மு.க. ஸ்டாலினை குறிப்பிட்டிருந்தார்கள். தலைவர் எவ்வழி, தொண்டர் அவ்வழி. அதனால் தானோ என்னவோ, அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்ட இன்றைய தி.மு.க. அமைச்சரவையின் எல்லா அமைச்சர்களும் முதல்வருக்கு ஈடுகொடுக்கப் பம்பரமாகச் சுற்றிச் சுழன்று செயல்படுகிறார்கள்.

> **குறளோவியம் தந்தவருடைய மகன், குறள்வழி அரிய சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் இந்தக் காலையில் அவருடைய பிறந்தநாள் விழா இங்கு மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது இப்போது மட்டுமல்ல, காலம் காலமாக; இன்று, நேற்று என்று இல்லாமல் என்றென்றும் தொடர்ந்து நடக்க வேண்டும். முதல்வர் அனைத்து நலமுடனும், வளமுடனும் அது மட்டும் போதாது, அரசியல் வலிமையுடனும் திகழ வேண்டும். அவருடைய வலிமையில் தமிழகம் உயர வேண்டும். தமிழகத்தின் வளர்ச்சியால் இந்தியா சர்வதேச அளவில் உயர்ந்து நிற்க வேண்டும்!**

எண்பதுகளில், அதாவது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் அன்றைய திமுக தலைவர் கலைஞருடன் தேர்தல் பிரசாரத்தின்போது பத்திரிகையாளர்களில் ஒருவனாகப் பயணித்த அனுபவம் எனக்கு உண்டு. பத்திரிகையாளர்களை விடுங்கள்; அவரது உதவியாளர்கள், கட்சித் தலைவர்கள் எல்லோருமே அவரது வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறுவதைப் பார்த்து நான் மலைத்துப் போயிருக்கிறேன். முத்துவேலர் கருணாநிதியின் மகன் வேறு எப்படி இருந்துவிட முடியும்? ஏ.எம்., பி.எம். பாராமல் சி.எம். பணியாற்றுவதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை!

திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிந்த இரண்டு திட்டங்கள் ஒன்று, மகளிருக்கு இலவச பேருந்துப் பயணம்; இன்னொன்று, மகளிர் உரிமைத் தொகைத்திட்டம். இவை இரண்டையும் தேர்தலில் வெற்றி பெற்று தமிழகம் நிறைவேற்றிய பிறகு, இன்று இந்தியாவின் எந்த மாநிலமாக இருந்தாலும் தேர்தல் நடப்பதாக இருந்தால், இந்த வாக்குறுதிகளைக் கொடுத்துதான் வெற்றி அடைகிறார்கள்; ஆட்சியைப் பிடிக்கிறார்கள்.

இந்த முறை சரியா? என்பது குறித்து எனக்கு கருத்து வேறுபாடு உண்டு. நான் இது சரியான முறை என்றெல்லாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இதன் பொருளாதாரப் பின்னணியை யோசிக்க வேண்டும் என்று அறிவுஜீவித்தனமாகதான் என்னால் யோசிக்க முடிகிறது. ஆனால், களத்தில் இருந்து அரசியல் விளையாடுபவர்களுக்கு அறிவுஜீவித்தனமாக யோசித்தால் மட்டும் போதாது; அடித்தட்டு மக்களின் உணர்வுகளையும், தேவைகளையும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும்.

### மையப்புள்ளியாக தமிழ்நாடு!

ஜனநாயகத்தில் மாற்றுக் கருத்தை முன்மொழியும் மாநிலமாக, கூட்டாட்சித் தத்துவத்துக்கு உரக்கக் குரல் எழுப்பும் மாநிலமாக, தேசிய அளவில் எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைவதற்கான மையப்புள்ளி மாநிலமாக இன்று இந்தியா தமிழகத்தைப் பார்க்கிறது.

மாற்றுக் கருத்துக்கு இடம் இருந்தால் மட்டும்தான் அது ஜனநாயகம். அந்த மாற்றுக் கருத்தை வலிமையாக, இன்னும் உரத்த குரலில் எழுப்புகின்ற ஒரே ஒரு மாநிலமாக தமிழகம் மட்டும்தான் இருக்கிறது.

ஒரு மனிதன் விமர்சனமே இல்லாமல் இருந்தால், அந்த மனிதன் செய்கின்ற தவறுகள் வெளியில் வரவே வராது.

**“இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்’**

என்பார் வள்ளுவப் பேராசான்.

பாராளுமன்ற ஜனநாயகம் எப்படி இருக்க வேண்டும் என்று சொன்னால், ஆட்சியாளர்கள் நிர்வாகத்தை நடத்த வேண்டும். ஆட்சியின் தவறுகளை எதிர்க்கட்சியினர் எடுத்துரைக்க வேண்டும், இடித்துரைக்க வேண்டும். ஆனால், அப்படி இல்லாத ஒரு நிலைமை ஏற்பட்டு விடுமோ என்கிற ஒரு சூழலில், துணிந்து எதிர்க் கருத்தை எடுத்து வைக்கின்ற ஒரு மாநிலமாக மாநிலத்தின் முதல்வராக, தமிழகமும் தமிழகத்தின் முதல்வரும் இருக்கிறார்கள்.

நாடாளுமன்றம் என்பது ஆளுங்கட்சியினருடையது அல்ல; எதிர்கட்சியினருடையது என்று சொல்வார்கள். “ஆப்போசிஸன் ஷுட் ஹேவ் இட்ஸ் ஸ... கவர்ன்மென்ட் ஹேஸ் இட்ஸ் வே!’ என்று சொல்வார்கள். எதிர்க்கட்சி தன்னுடைய கருத்துகளைப் பதிவு செய்கின்ற இடம் நாடாளுமன்றம். அவர்கள் அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் விமர்சித்துப் பேசுவதற்கான இடம். சட்டங்களையும் மசோதாக்களையும் தங்களுடைய பெரும்பான்மை பலத்தால் நிறைவேற்றிக் கொள்வதுதான் ஆளுங்கட்சி. இதுதான் வழிமுறை.

**இப்போது, சமீப காலமாக அந்த வழிமுறைகள் எல்லாம் மாறிவிட்டன. விவாதமே இல்லாமல் நாடாளுமன்றத்தில் மசோதாக்கள் சட்டமாகின்றன. இது ஆரோக்கியமான ஜனநாயகம் அல்ல என்ற மனக்குறையை மாற்றுகின்ற விதத்தில், எங்கேயோ இருந்து ஒரு குரல் எழும்புகிறது என்று சொன்னால், அது சென்னை செனடாப் சாலையிலிருந்தும் சென்னை கோட்டையிலிருந்தும் மட்டும் தான். அதற்காக முதல்வரை நாம் பாராட்ட வேண்டும்.**

எதிர்க்கட்சிகள் வேண்டாம் என்று கருதுகின்ற ஒரு சூழ்நிலை வருமானால், ஜனநாயகம் தோற்றுவிடும். ஜனநாயகம் தோற்றுவிட்டால், இந்திய தேசம் தோற்றுவிடும். எனவே, அதற்கு எதிராகக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரின் பிறந்தநாள் என்பதால் நான் வரவேற்கவும், பாராட்டவும், வாழ்த்தவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

### வேறெந்த மாநிலமும் சிந்திக்காத திட்டங்கள்!

நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து இந்த ஆட்சி செய்திருக்கின்ற அறிவித்திருக்கின்ற பல திட்டங்களை நமது நண்பர்கள் எடுத்துரைத்தார்கள். மகளிர் உரிமைத் தொகையாகட்டும்; காலை உணவுத் திட்டமாகட்டும்; நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இல்லம் தேடிக் கல்வித் திட்டம், கனவு இல்லம் திட்டம் இப்படி எத்தனை எத்தனையோ திட்டங்கள். அத்தனையும் இதற்கு முந்தைய ஆட்சிகளில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவில் உள்ள வேறு எந்த மாநிலமும் சிந்தித்துப் பார்க்காத திட்டங்கள்.

வட சென்னைக்காக வளர்ச்சித் திட்டமே தீட்டப்பட்டிருக்கிறது. “இந்தியாவில் வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது’ என்று அரை நூற்றாண்டுக்கு முன்னால் சொன்னார்கள். சென்னை மாநகரத்தைப் பொருத்தவரை, தெற்குதான் வளர்ந்து கொண்டே இருக்கிறது. வடக்கு தேய்ந்து கொண்டேதான் இருக்கிறது. அதை மாற்றுவதற்காகத்தான் காலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இப்போதைய திமுக ஆட்சியைக் கொண்டு வந்திருக்கிறது.

டாக்டர் கலாநிதி வீராசாமி வட சென்னை மக்களவை உறுப்பினர்; மாநகர மேயர் திருமதி. பிரியா ராஜன் வட சென்னையைச் சேர்ந்தவர்; நம்முடைய இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வட சென்னையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர் மட்டுமல்லாமல், தி.மு.க.வின் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும்கூட. அதைவிடச் சிறப்பு என்னவென்றால், நமது தமிழக முதல்வரே வட சென்னைக்கு உள்பட்ட கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியிலிருந்து தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்படுபவர். எனவே இந்த ஆட்சியில் இல்லாமல் வேறு எந்த ஆட்சியிலும் வட சென்னை, தென் சென்னைக்கு நிகராக வளர்ந்துவிடாது.

### இந்த ஆட்சி தொடர வேண்டும்!

கடந்த நான்கு ஆண்டுகளில் வட சென்னை அடைந்திருக்கும் வளர்ச்சியும், வட சென்னையில் உருவாகி வரும் கட்டமைப்பு வசதிகளும், நிறைவேற்றப்படும் திட்டங்களும் விரைவிலேயே தென் சென்னையை விஞ்சும் விதமாக வட சென்னையை மாற்றிவிடும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அதற்காகவே இந்த ஆட்சி தொடர வேண்டும்.

### முதல்வரின் வலிமையால் தமிழகம் உயர வேண்டும்!

“தினமணி’யையும், ஆசிரியர் உரையையும் படித்துவிட்டு பலரும் கேட்பார்கள், “எப்படி நீங்கள் தினந்தோறும் அந்த ஆசிரியர் உரைக்குப் பொருத்தமாக ஒரு திருக்குறள் தருகிறீர்கள் என்று’. வள்ளுவப் பேராசானும், நானும் அன்றாடம் பயணிப்பவர்கள். எனவே, திருக்குறளைப் பிரித்து வைத்தேன். முதல்வருக்குப் பொருத்தமான சில குறள்களைத் தேர்ந்தெடுத்தேன். ஏன் தேர்ந்தெடுத்தேன், அதன்மூலம் என்ன செய்தியைச் சொல்ல விரும்புகிறேன் என்பதை அவரவர் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

**“பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்**
**பொருத்தலும் வல்ல தமைச்சு’**

**“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்’**

**“சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்’**

**“சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்**
**தாழாது உஞற்று பவர்க்கு’**

**“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்’**

குறளோவியம் தந்தவருடைய மகன், குறள்வழி அரிய சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் இந்தக் காலையில் அவருடைய பிறந்தநாள் விழா இங்கு மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது இப்போது மட்டுமல்ல, காலம் காலமாக; இன்று, நேற்று என்று இல்லாமல் என்றென்றும் தொடர்ந்து நடக்க வேண்டும். முதல்வர் அனைத்து நலமுடனும், வளமுடனும் அது மட்டும் போதாது, அரசியல் வலிமையுடனும் திகழ வேண்டும். அவருடைய வலிமையில் தமிழகம் உயர வேண்டும். தமிழகத்தின் வளர்ச்சியால் இந்தியா சர்வதேச அளவில் உயர்ந்து நிற்க வேண்டும்!

இவ்வாறு ‘தினமணி’ ஆசிரியர் வைத்தியநாதன் அவர்கள் உரையாற்றினார்.